**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**

**O.S. 13/2018**

வா.சா.1 தேதி. 16.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌந்திரராஜன் | த/பெ. | சிங்காரம்பிள்ளை |
| வயது | 84 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதியாவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பு ஆவணங்களாக 23.04.1976 தேதியிட்ட அசல் வழக்கு எண் 282/1976 டிமு கோர்ட்டு சீர்காழியில் திருத்தப்பட்ட பிராது அலுவலக நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 1976ஆம் ஆண்டில் O.S.282/1976 டி.மு. கோர்ட்டு சீர்காழியில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 1976ஆம் ஆண்டில் O.S.282/1976 டி.மு. கோர்ட்டு சீர்காழியில் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 27.06.1978 O.S. 282/1976 டிமு கோர்ட் சீர்காழியில் வழங்கிய தீர்ப்புரை நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 22.01.1979 தேதியில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் A.S. 139/1979 ல் வழங்கிய டிகிரி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 22.01.1979 மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் A.S.139/1978ல் வழங்கிய டிகிரி நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 22.01.1979 தேதியிட்ட மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் A.S./ 139/1978ல் வழங்கிய தீர்ப்புரை மற்றும் O.S.282/1976 தீர்ப்புரை நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 10.10.2017 தேதியிடம் வாதி வழக்கறிஞர் 1ம் பிரதிவாதி மற்றும் மணிமேகலைக்கு அனுப்பிய நோட்டீஸ் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 01.11.2017 தேதியிட்ட 1ம் பிரதிவாதியும் மணிமேகலையும் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் நோட்டீஸ் நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 11.12.2016

தேதியிட்ட வாதி டிரஸ்டின் தீர்மானம் அசல் **வா.சா.ஆ.9** ஆகவும், 09.06.2017 தாவா சொத்தின் Guidelineமதிப்பீடு அசல் **வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.